*1*

# இஸ்ரவேலில் தேவனுடைய மனிதர்

## (1 இராஜாக்கள் 16:29-17:1)

*விசேஷித்த ஒரு மனிதரைப் பற்றி நாம் படிக்கையில் உடன் வாருங்கள். இஸ்ரவேல் குலம் உருவாக்கியவர்களிலேயே இம்மனிதர் மாபெரும் மற்றும் மிகவும் வீரமிக்கவர் என்று அழைக்கப்பட்டுள்ளார். காட்சியில் அவர் இருளில் இருந்து வெளிவரும் மின்னல் வெளிச்சம்போல் வருகிறார்; அவர் ஒரு எரிநட்சத்திரம் போலத் தமது காலத்தின் இருளினூடே விரைந்து செல்கிறார், உண்மையில் அவர் ஒரு சுழற்காற்றில் செல்லுகிறார். அவர் "அக்கினியின் மனிதர்" என்று அழைக்கப்பட்டிருக்கிறார், இந்த மனிதரை நாம் " இஸ்ரவேலில் தேவனுடைய மனிதர்" என்று அழைக்கிறோம் - இவர்தான் எலியா.*

*வேதாகமத்தில் ஒருசில அதிகாரங்களே எலியாவைப் பற்றி நாம் அறிகிற யாவற்றையும் கூறுகின்றன, ஆனால் இம்மனிதரைப் பற்றி சில விஷயங்கள் கற்பனையைப் பிடிக்கின்றன. புதிய ஏற்பாட்டு காலகட்டங்களில், ஆபிரகாம் மற்றும் மோசே ஆகியோர் மாத்திரமே அவரைக் காட்டிலும் புகழில் விஞ்சியிருந்த நிலையில், யூதத்துவ வரலாற்றில் மிகவும் மதிக்கப்பட்ட மற்றும் பயங்கலந்த மரியாதை செய்யப்பட்ட மனிதர்களில் ஒருவராக இருந்தார். புதிய ஏற்பாட்டில் அவர், பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள் வேறு எவரைக்காட்டிலும் அதிகமாக, முப்பதுக்கும் அதிகமான முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளார்.*

*இயேசு மறுரூபமானபோது, அவர் மோசே மற்றும் தாவீது ஆகியோருடனோ அல்லது மோசே மற்றும் ஏசாயா ஆகியோருடனோ தரிசனமாகவில்லை, ஆனால் மோசே மற்றும் எலியா ஆகியோருடன் தான் தரிசமானார். மோசே நியாயப்பிரமாணத்தைக் கொடுத்த மகாபெரியவராய் இருந்தார்; எலியா ஒரு நாட்டையே அந்த நியாயப்பிரமாணத்திற்குத் திரும்ப அழைத்த மனிதராக இருந்தார். தேவனுடைய கட்டளைகளை வழங்குவது முக்கியமானதாக இருந்தது; தேவனுடைய வெளிப்படுத்துதலின் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளுக்கு மனிதர்களைத் திரும்ப அழைத்தல் என்பது சம அளவு முக்கியமானதாக இருந்தது.*

*எலியா அசலானவராக இருந்தார்.* மோனா லிசாவின் *உருவச் சித்திரத்தினுடைய பிரதி அல்லது அச்சிட்ட படம் ஒன்றை எவரொருவரும் ஒருசில நூறுரூபாய்கள் கொடுத்து வாங்கிவிட முடியும், ஆனால் அதன் அசல் படமானது எந்த ஒரு விலையும் குறிப்பிடப்பட இயலாத அளவுக்கு மிகவும் மதிப்புடையதாக உள்ளது. அதுபோன்றே, எலியா தமது நாட்களிலும் காலத்திலும் தேவனுக்காக நிறைவேற்றியவற்றின் மதிப்பைக் குறித்துக் கணக்கிடுவதற்குக் வழியெதுவும் இல்லை.*

*எலியாவைப் பற்றியும் அவர் செய்த எல்லாவற்றைப் பற்றியும் நாம்*

படித்து முடிக்கையில், அவரைப்பற்றி நாம் நம்மால் செய்ய இயலாதவற்றைச் செய்வதற்கு, நாம் தரவழைக்க இயலாத ஆதாரமூலங்களைக் கொண்டிருந்த ஒருவர் என்ற வகையில் அவர் சக்திமானாக இருந்தார் என்று நாம் நினைக்கக் கூடாது. அவரது மக்கள் இந்த தவறைச் செய்தனர். ஏற்பாடுகளுக்கு இடையிலான காலகட்டத்தில், யூதர்கள் எலியாவைப் பற்றி பல பாரம்பரியக் கதைகளை வளர்த்தனர், அவரை ஒரு நிழல் உருவமாக்கி, அழிந்து போகிற மனிதனைக் காட்டிலும் அதிகமானவர் என்றாக்கினர். இவ்வாறாக யாக்கோபு தமது நிருபத்தில், எலியாவை ஒரு விவரிப்பாகப் பயன்படுத்துகையில், "எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், ..." (யாக்கோபு 5:17) என்று கூறுவதற்கு அவர் துரிதப்பட்டார். KJV வேதாகமம், அவர் "எலியா என்பவன் நம்மைப்போல உணர்வுகளுக்குக் கீழ்ப்பட்டுள்ள மனுஷனாயிருந்தும்," என்று கூறுகிறது. அவர் நாம் உணர்வது போலவே உணர்ந்தார். அவர் நாம் போராடுவது போலவே போராடினார். அவர் நாம் ஊக்கமிழப்பது போலவே ஊக்கமிழந்தார்.

இருப்பினும், ஒரு விசேஷித்த காலத்திற்கும் இடத்திற்கும் எலியா தேவனுடைய விசேஷித்த மனிதராக இருந்தார் என்ற உண்மை நிலைத்திருக்கிறது. இது ஏன் என்பதை, நாம் அவரது வாழ்வினூடே கடந்து செல்லுகையில் காண்போம்.

## எலியாவின் நாட்களில் இஸ்ரவேல்

எலியாவை முற்றிலுமாக மதித்து உணருவதற்கு நாம், அவரை அவருடைய காலங்களின் சந்தர்ப்பப்பொருளில் காணவேண்டும். ஒருமுறை நான், ஒரு கலைப்படைப்பின் மனதை ஈர்க்கும் சித்திரம் ஒன்றைக் கண்டேன். பின்பு நான் அந்தப் படத்தின்கீழ் இருந்த குறிப்பை வாசித்தேன். அது கைகளோ அல்லது பாதங்களோ இல்லாத ஒரு மனிதரால், அந்த வரைகலைஞரின் வாயில் தூரிகை வைக்கப்பட்ட நிலையில் வரையப்பட்டதாக இருந்தது. பின்பு நான் *உண்மையிலேயே* அந்த சித்திரத்தை மதித்தேன். அதுபோலவே, 1 இராஜக்கள் 17 மற்றும் அதைத் தொடர்ந்து வரும் அதிகாரங்களைச் சாதாரணமாக வாசிப்பதன் மூலம் நாம் எலியாவை மதித்து உணர முடியும் என்றாலும், அவர் வாழ்ந்து ஊழியம் செய்த காலங்களின் பின்னணியை நாம் வாசிக்கையில், அவரை நாம் இன்னும் அதிகமாக மதித்து உணரவருவோம்:

> யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் முப்பத்தெட்டாம் வருஷத்தில் உம்ரியின் குமாரனாகிய ஆகாப் இஸ்ரவேலின்மேல் ராஜாவாகி, சமாரியாவில் இஸ்ரவேலின்மேல் இருபத்திரண்டு வருஷம் ராஜ்யபாரம்பண்ணினான் (1 இராஜாக்கள் 16:29).

"யூதா" மற்றும் "இஸ்ரவேல்" என்ற வார்த்தைகளைக் கவனியுங்கள். சவுல், தாவீது மற்றும் சாலொமோன் ஆகியோர் ஒன்றுபட்டிருந்த இராஜ்யத்தின் மீது ஆளுகை செலுத்தியிருந்தனர். ஆயினும், சாலொமோனின் மகனான ரெகொபெயாம், தவறான ஆலோசனைக்கு செவிகொடுத்தபோது, இராஜ்யம் பிரிவுபட்டது (1 இராஜாக்கள் 12). உள்நாட்டு யுத்தம் தொடர்ந்தது. பகை என்ற புகை தெளிவானபோது, ஒன்றிற்குப் பதிலாக இரண்டு இராஜ்யங்கள்

நின்றன. தெற்கு இராஜ்யத்தில் பன்னிரெண்டில் இரண்டு கோத்திரங்கள் மாத்திரம் உள்ளடக்கப் பட்டிருந்தன. இவ்விரு கோத்திரங்களிலும் மேலாதிக்கம் செய்தது யூதாவாகும், எனவே தெற்கு இராஜ்யம் யூதேயா இராஜ்யம் என்று அறியப்பட்டது. இந்த இராஜ்யம் பாபிலோனியருடைய கைகளினால் விழுந்துபோன காலம் வரையிலும், இது ஒருவருக்குப் பின் ஒருவராகப் பதினேழு அரசர்களைக் கொண்டிருந்தது, இவர்கள் யாவரும் தாவீதின் வழித்தோன்றல்களாக இருந்தனர்.

வடக்கு இராஜ்யம் நமக்கு மிகவும் ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது, ஏனெனில் எலியா வடக்கு இராஜ்யத்தில்தான் ஊழியம் செய்தார். வடக்கு இராஜ்யம் இஸ்ரவேல் இராஜ்யம் என்று அழைக்கப்பட்டது, ஏனென்றால் அது இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களில் பத்துக் கோத்திரங்களை உள்ளடக்கியிருந்தது. விக்கிரக ஆராதனைக்காரரான யெரொபெயாம் என்பவர் இதன் முதல் ஆட்சியாளராக இருந்தார். ஒருவருக்குப் பின் ஒருவராக இந்த நாட்டை ஆண்ட பத்தொன்பது அரசர்களுமே மோசமானவர்களாக இருந்தனர், கடைசியில் இது ஆசீரியாவினால் அழிக்கப்பட்டது.

ஆகாப் இஸ்ரவேல் நாட்டின்மீது இருபத்தி இரண்டு ஆண்டுகள் ஆளுகை செய்தார். இவரது ஆட்சிக்காலமானது, மக்களினம்/நாடு என்ற வகையில் இஸ்ரவேலுக்கு ஒரு உயர்ந்த கட்டமாக இருந்தது என்று உலகப்பிரகாரமான வரலாறு நமக்குக் கூறுகிறது. ஆகாப் ஒரு மாபெரும் கட்டுவிப்பாளராக இருந்தார் (கவனிக்கவும் 1 இராஜாக்கள் 21:1; 22:39). அவர் ஒரு மாபெரும் இராணுவ நடத்துனராக இருந்தார். அவர் சீரியாவுக்கு எதிரான இரு யுத்தங்களில் வெற்றிகரமாக யுத்தம் செய்திருந்தார். அவர் ஒருமுறை அசீரியாவிலும் கூட வெற்றிகரமாக யுத்தம் செய்திருந்தார். அவரது அயல்நாட்டுக்கொள்கை மதிநுட்பமுடையதாக இருந்தது. அரசியல்ரீதியாக, பொருள்ரீதியாக மற்றும் இராணுவரீதியாக அவர் அதிகம் சாதித்திருந்தார். அவரது ஆட்சிக்காலம் பொதுவாக சமாதானம் மற்றும் வளமையின் காலமாக இருந்தது.

இருப்பினும் ஏவுதல் பெற்ற எழுத்தாளர், இந்த சாதனைகளைப்பற்றிக் கொஞ்சமே நமக்குக் கூறுகிறார். இவைகள் முக்கியமான விஷயங்களாக இருக்கவில்லை. 1 இராஜாக்கள் 16:30 வசனமானது, இவரது ஆளுகைபற்றித் தேவனுடைய கருத்துநோக்கை நமக்குத் தருகிறது: “உம்ரியின் குமாரனாகிய ஆகாப் தனக்கு முன்னிருந்த எல்லாரைப்பார்க்கிலும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.”

“தனக்கு முன்னிருந்த எல்லாரைப்பார்க்கிலும்”: அது எவ்வளவு மோசமானதாக உள்ளது? அவர் பரிசுத்தவான்களின் ஒரு வரிசைக்குப் பின்பு வந்திருந்தால், அது மிகவும் மோசமானதாக இருந்திராது. இந்தச் சொற்றொடரைப் புரிந்துகொள்வதற்கு, நாம் ஆகாபின் முன்னோர்களை ஆய்வுசெய்ய வேண்டும்.

இஸ்ரவேலின் முதல் அரசரான *யெரொபெயாம்* விக்கிரங்களை ஆராதிப்பவராக இருந்தார்:

> ஆகையால் ராஜாவானவன் யோசனைபண்ணி, பொன்னினால் இரண்டு கன்றுக்குட்டிகளை உண்டாக்கி, ஜனங்களைப் பார்த்து: நீங்கள் எருசலேமுக்குப் போகிறது உங்களுக்கு வருத்தம்; இஸ்ரவேலரே, இதோ,

> *இவைகள் உங்களை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணின உங்கள் தேவர்கள் என்று சொல்லி, ஒன்றைப் பெத்தேலிலும், ஒன்றைத் தாணிலும் ஸ்தாபித்தான். ... அவன் மேடையாகிய ஒரு கோவிலையும் கட்டி, லேவியின் புத்திரராயிராத ஜனத்தில் ஈனமானவர்களை ஆசாரியராக்கினான். ... தன் மனதிலே தானே நியமித்துக்கொண்ட எட்டாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே பெத்தேலில் தான் உண்டாக்கின பலிபீடத்தின்மேல் பலியிட்டு, இஸ்ரவேல் புத்திரருக்குப் பண்டிகையை ஏற்படுத்தி, பலிபீடத்தின் பலியிட்டுத் தூபங்காட்டினான் (1 இராஜாக்கள் 12:28, 29, 31, 33).*

*யெரொபெயாம் அடிவைப்பு ஒன்றைத் தொடங்கிவைப்பவராக இருந்தார். அவர் விக்கிரக ஆராதனைக்கு விதைகளை விதைத்தார், மற்றும் அவற்றை அவர் ஆழமாக நட்டார். அவரைப் பின்பற்றிய அரசர்களைப் பற்றி நாம் வாசிக்கையில், அவர்கள் யெரொபெயாவின் துன்மார்க்கமான வழிகளில் நடந்தனர் என்பதைத் திரும்ப திரும்ப நாம் கவனிப்போம்.*

*யெரொபெயாம் இருபத்தி இரண்டு ஆண்டுகள் ஆட்சிசெய்தார்; பின்பு அவரது இடத்திற்கு வந்த அவரது மகனான நாதாப் ஆளுகை செய்தார் (1 இராஜாக்கள் 14:20).*

*நாதப், "போதும் போதும். நாம் யெகோவாவை ஆராதிக்கத் திரும்புவது அவசியம்" என்று கூறியிருக்க முடியும். அவர் அவ்வாறு செய்தாரா? இல்லை:*

> *... யெரொபெயாமின் குமாரனாகிய நாதாப் இஸ்ரவேலின்மேல் ராஜாவாகி, இரண்டுவருஷம் இஸ்ரவேலின்மேல் ராஜ்யபாரம் பண்ணினான். அவன் கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தன் தகப்பன் வழியிலும், அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின அவனுடைய பாவத்திலும் நடந்தான் (1 இராஜாக்கள் 15:25, 26).*

*இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு, பாஷாவினால் நாதாப் கொல்லப்பட்டார் (1 இராஜாக்கள் 15:27, 28).*

*பாஷா ஒரு புதிய அரசவம்சத்தைத் தொடக்கி வைத்தார். புதியதொரு தொடக்கத்துடன், இஸ்ரவேலின் மீது ஒருநல்ல அரசரைக் கொண்டிருத்தலின் சாத்தியக்கூறு நிலவிற்று. மீண்டும், இல்லை: பாஷா தனது ஆட்சியை பெரும் எண்ணிக்கையிலான கொலையுடன் தொடங்கினார். "அவன் ராஜாவானபின் அவன் யெரொபெயாமின் வீட்டாரையெல்லாம் வெட்டிப்போட்டான்; யெரொபெயாமுக்கு இருந்த சுவாசமுள்ளதொன்றையும் அவன் அழிக்காமல் விடவில்லை" (1 இராஜாக்கள் 15:30). இருப்பினும் அவரது ஆட்சியானது அவர் அழித்துப்போட்ட குடும்பத்தின் ஆட்சியைக் காட்டிலும் மேன்மையானதாக இருக்கவில்லை.*

> *... அகியாவின் குமாரனாகிய பாஷா, இஸ்ரவேலனைத்தின்மேலும் திர்சாவிலே ராஜாவாகி இருபத்து நாலு வருஷம் ஆண்டு, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, யெரொபெயாமின் வழி யிலும், அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின அவனுடைய பாவத்திலும் நடந்தான் (1 இராஜாக்கள் 15:33, 34).*

*கடைசியில் பாஷா இறந்தார், அவரது மகனாகிய ஏலா ஆட்சிசெய்யத் தொடங்கினார் (1 இராஜாக்கள் 16:6).*

*ஏலா இரண்டு ஆண்டுகள் ஆட்சிசெய்தார் (1 இராஜாக்கள் 16:8). அவர் இஸ்ரவேலின்மீது ஆட்சி செய்த தேவபக்தியற்ற ஆட்சியாளர்களின் நீண்ட வரிசையில் இன்னொருவராக இருந்தார்:*

> *இரதங்களில் பாதிபங்குக்குத் தலைவனாகிய சிம்ரி என்னும் அவன் ஊழியக்காரன் அவனுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணி, அவன் திர்சாவிலே அவ்விடத்து அரமனை உக்கிராணக்காரனாகிய அர்சாவின் வீட்டிலே குடித்து வெறிகொண்டிருக்கையில், சிம்ரி உள்ளே புகுந்து, ... அவனை வெட்டிக் கொன்று போட்டு, அவன் ஸ்தானத்தில் ராஜாவானான் (1 இராஜாக்கள் 16:9, 10).*

*சிம்ரி, பாஷாவின் வீட்டார் அனைவரையும் கொன்றதன்மூலம் தமது ஆட்சியைத் தொடங்கினார் (1 இராஜாக்கள் 16:11). அவர் எவ்வளவு நாட்கள் நீடித்திருந்தார்? "சிம்ரி திர்ஷாவிலே ஏழுநாள் ராஜாவாயிருந்தான்" (1 இராஜாக்கள் 16:15). மக்கள், சிம்ரியின்மீது கோபம்கொண்டிருந்தனர், அவர்கள் சிம்ரி இருந்த இடத்தில் படைத்தலைவனாயிருந்த ஓம்ரியை ராஜாவாக நியமித்தனர். ஓம்ரி, சிம்ரியிருந்த இடத்திற்கு வந்தபோது, சிம்ரி, தான் தப்பிக்க இயாலாது என்று கண்டார், எனவே அவர் தம்மைச் சுற்றியிருந்த அரசரின் அரண்மனையைத் தீவைத்துக் கொளுத்தினார் (அவர் "நான் ஒன்றைப் பெற்றுக்கொள்ள இயலாவிட்டால், எவரொருவரும் அதைப் பெற்றுக்கொள்ளக் கூடாது" என்ற எண்ணப்போக்கைக் கொண்டிருந்தார்.)*

*ஓம்ரி. அது, ஆகாபின் தந்தையான ஓம்ரியின் ஆட்சியினிடத்தில் நம்மைக் கொண்டுவருகிறது. ஒரு சில ஆண்டுகள் கோபமான சண்டைக்குப் பின்பு, ஓம்ரி வடக்கு இராஜ்யம் முழுமையையும் ஆட்சி செய்தார். அவர் பன்னிரெண்டு ஆண்டுகள் ஆட்சிசெய்து, சமாரியா நகரைக் கட்டியெழுப்பினார் (1 இராஜாக்கள் 16:23, 24). மனிதக் கருத்துநோக்கின்படி, அவரது ஆட்சி ஒரு வெற்றிகரமான ஆட்சியாக இருந்தது. இருப்பினும், அவரது ஆட்சியைத் தேவன் எவ்வாறு கண்ணோக்கிார்?*

> *உம்ரி கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தனக்கு முன்னிருந்த எல்லாரைப்பார்க்கிலும் கேடாய் நடந்து, நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் சகல வழியிலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குத் தங்கள் வீணான விக்கிரகங்களாலே கோபம் மூட்டும்படியாய் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின அவனுடைய பாவங்களிலும் நடந்தான் (1 இராஜாக்கள் 16:25, 26).*

*அவர் இறந்தபோது, அவரது இடத்தில் ஆகாப் அரசரானார் (1 இராஜாக்கள் 16:28).*

*நாம், இரத்தம் சிந்துதல், நிலைகுலைவு, கொலை, விக்கிரகாராதனை, குரோதம், வெறுப்பு, சதியாலோசனை, சூழ்ச்சி மற்றும் ஒழுக்கவீனம் ஆகியவற்றின் ஆறு பத்தாண்டுகளினூடே சிரமத்துடன் கடந்து வந்திருக்கிறோம்.*

இப்போது நாம், "உம்ரியின் குமாரனாகிய ஆகாப், தனக்கு முன்னிருந்த எல்லாரைப்பார்க்கிலும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்" (1 இராஜாக்கள் 16:30) என்ற கூற்றின் எல்லா மறைமுக அர்த்தங்களையும் புரிந்துகொள்ளத் தயாராக இருக்கிறோம். நாம், இஸ்ரவேல் வரலாற்றின் மிகத்தாழ்வான பின்னடைவுக்கும் மிகவும் இருளான இரவுக்கும் வந்திருக்கிறோம். அரியணையானது இதைப்போன்றிருந்தால், தேவனுடைய மக்களை வழிநடத்துதல் என்பது இதைப்போன்று இருந்திருந்தால், மக்களின் நிலையைப் பற்றிக் கற்பனை செய்து பாருங்கள்!

நமது படிப்பைத் திரும்பவும் தொடருவதில், நாம் 31ம் வசனத்தைக் கண்ணோக்குவோமாக: "நோபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களில் நடப்பது அவனுக்குக் கொஞ்சக்காரியமென்று நினைத்தாற்போல் அவன் [ஆகாப்] ..." இன்றைய நாட்களில் நாம் இதை, "அது போதாதென்பது போல" என்றோ அல்லது "விக்கிரகாராதனை செய்தல் என்பது விளைவுகள் எதுவுமற்ற விஷயம் என்பது போல" என்றோ கூறலாம்.

இஸ்ரவேலின் விஷயங்கள் மோசமாகியிருக்க முடியாது என்று நாம் நினைப்போம், ஆனால் அவை மோசமாயின. 31ம் வசனத்தின் நிறைவுப்பகுதியில் நாம், மிகவும் குறிப்பிடத்தக்க சொற்றொடரைக் காண்கிறோம்: "அவன் [ஆகாப்] ... சீதோனியரின் ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தி யேசபேலை விவாகம்பண்ணினதுமல்லாமல், அவன் போய் பாகாலையும் சேவித்து அதைப் பணிந்துகொண்டு."

இப்போது ஆராய்ச்சி செய்துள்ள அதிகாரங்களில் நாம், இஸ்ரவேல் அரசர்களில் ஒருவர் தொடர்பாக, எந்த ஒரு திருமணத்தைப் பற்றியும் வாசிக்கவில்லை, ஆனால் இங்கு நாம் அதைப்பற்றி வாசிக்கிறோம். ஏன்? முதலாவது, ஆகாப் யாரைத் திருமணம் செய்துகொண்டான் என்ற விஷயத்தினால் நாம் அதை வாசிக்கிறோம்.

யேசபேல் என்ற பெயர் குறிப்பிடப்படும்போது, நாம் அதைப்பற்றி என்ன நினைக்கிறோம்? அனேகமாக நாம், அழகான மற்றும் மதிமயக்குகிற ஒரு பெண்ணைப் பற்றி நினைக்கலாம் - ஆனால் அவள் சூழ்ச்சிமிக்க, பழிபாவத்திற்கு அஞ்சாத மற்றும் ஒழுக்கரீதியான உணர்வு எதுவுமற்ற ஒருத்தியாகவும் இருந்தாள். யேசபேல் என்பவள், வேதாகமத்திலேயே மிகவும் வெறுக்கப்பட்ட பெண்ணாக இருக்கிறாள்; அவளது பெயரானது பொல்லாங்குடன் நெருக்கம் கொண்ட சொல்லாக உள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில், தியத்தீராவில் இருந்த உடன்பாடு செய்துகொள்ளும் சபைக்குழுமமானது, யேசபேல் ஒரு உறுப்பினராக இருந்த சபை என்று அழைக்கப்படுகிறது (2:20). ஒரு மகளை யேசபேல் என்ற பெயரிட்டு அழைக்கும் ஒருவரையும் நான் அறிவதில்லை.

நமது வசனப்பகுதியானது, அவளைப்பற்றி, "சீதோனியரின் ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தி யேசபேல்" என்று கூறுகிறது. அவள் ஒரு புறதெய்வ வணக்கக்காரியாக இருந்தாள், மற்றும் இஸ்ரவேல் மக்கள் புறதெய்வ வணக்கத்தாரிலிருந்து ஒருவரைத் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்று தேவன் கூறியிருந்தார் (உபாகமம் 7:1-5). இருப்பினும் அவள் ஒரு சாதாரணமான புறதெய்வ வணக்கக்காரியாக இருக்கவில்லை. ஏத்பாகால் என்பவர் பெனிக்கியரின் முதன்மைத் தெய்வமான பாகாலுக்கு ஆசாரியராக இருந்தார்

என்று வரலாறு நமக்குக் கூறுகிறது. குறிப்பாக அவர், மெல்கார்ட் மற்றும் அஸ்தரோத் என்று அழைக்கப்பட்ட பாகாலின் வெளிப்பாட்டு உருவங்களுக்கு ஆசாரியராக இருந்திருந்தார். சக்தியின் தெய்வத்திற்கு அர்ப்பணித்திருந்த நிலையில், அவர் தமக்கு அதிகாரம் வேண்டும் என்று பேராசை கொண்டிருந்தார் மற்றும் அவர் பெலிஷ் என்பவரைக் கொலைசெய்ததன் மூலமாக தீரு மற்றும் சீதோனின் அரியணையில் ஏறியிருந்தார். அவரது அரச உடைகள் இரத்தத்தினால் கறைப்பட்டிருந்தன. யேசபேல் தனது தந்தையிடத்தில் இருந்து தனது பாடங்களை நன்கு கற்றிருந்தாள்: தனது தெய்வங்கள் மீது வைராக்கியம் கொண்டிருத்தல் மற்றும் தன்னைக் காட்டிலும் பலவீனமான எவரொருவர் மீதும் விரோதம் கொண்டிருத்தல். இரக்கம் மற்றும் பரிவிரக்கம் என்பவை அவளது ஒப்பனையில் இருந்ததில்லை.

இரண்டாவது, யேசபேல் செய்தது என்ன என்பதன் காரணத்தால், அவளை ஆகாப் திருமணம் செய்துகொண்டதைப் பற்றி நாம் வாசிக்கிறோம். அவள் இஸ்ரவேல் சமூகத்தில், யொகோவாவினுடைய விசேஷித்த மக்களின் இருதயங்களிலும் வாழ்க்கையிலும் பாகால் வணக்கத்தை அறிமுகப்படுத்தினாள்.

“பாகால்” என்பது “கர்த்தரின்” என்று நேரடியாக அர்த்தப்படுகிறது. கானானியர்கள் தங்கள் எல்லாக் கடவுள்களையும் குறிப்பிடுவதற்கு அவர்களால் இந்தப் போர்வைச் சொற்றொடர் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது. அவர்கள் தங்களின் மிக உயர்ந்த ஆண் கடவுளைக் குறிப்பிடுவதற்கும் இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தினர். பாகால் என்பவன் வளமையின் மாபெரும் தெய்வமாக இருந்தான்: சூரியக் கடவுள்; நிலம், தாவரங்கள் மற்றும் பயிர்கள் ஆகியவற்றின் கடவுள்; காற்று, மழை, பருவகாலங்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்திய கடவுள் என்னப்பட்டான். கானானியர்கள் நல்ல பயிர் விளைச்சலைக் கொண்டிருந்தால், அவர்கள் யெகோவாவிற்கு நன்றி செலுத்த வில்லை; அவர்கள் பாகாலுக்கோ அல்லது அவனது கீழ் உள்ள கடவுள்களில் ஒருவனுக்கோ நன்றி செலுத்தினர்.

பாகாலின் வணக்கம் என்பது கானானியர்களின் கலாச்சாரத்தில் மிகநீண்ட காலமாக ஒரு பாகமாக இருந்தது, ஆனால் அது இஸ்ரவேலில் ஒருக்காலும் ஒரு பிரதான காரணியாக இருந்தது இல்லை. யெரொபெயாம்கூடத் தமது பொன்கன்றுக்குட்டிகள் மற்றும் தோப்புகளுடன் யெகோவாவுக்கான ஒரு மோசடியான ஆராதனையையே மேம்படச் செய்திருந்தார். ஆயினும் இப்போது யேசபேல், ஒரு ஊழிய வைராக்கியத்துடன் வந்தாள். சாலொமோனின் புறஜாதிமனைவிகள், எருசலேமில் யெகோவாவுடன் தங்கள் கடவுள்களை வைப்பதுடன் திருப்தி அடைந்தனர், ஆனால் யேசபேல் அவ்வாறு திருப்தி யடையவில்லை. அவளது கடவுள் உண்மையான கடவுளாக, ஒரே கடவுளாக இருக்க வேண்டியிருந்தது; யெகோவாவை ஆராதித்தல் என்பது நாட்டில் இருந்தே ஒழிக்கப்பட வேண்டியதாக இருந்தது.

யெகோவாவின் பலிமேடைகள் தகர்க்கப்பட்டன. யெகோவாவின் தீர்க்கதரிசிகள் காட்டு மிருகங்களைப் போல் வேட்டையாடப்பட்டு, கொல்லப் பட்டனர் அல்லது வாயடைக்கப் பட்டனர். பின்பு யேசபேல், பாகாலின் 450 ஆசாரியர்களையும், வளமைக்குப் பெண்தெய்வமும் பாகாலின் பெண் இணையுமான ஆஷெராவின் [இது தமிழ் வேதாகமத்தில் தோப்பு விக்கிரகம்

என்றுள்ளது] 400 ஆசாரியர்களையும் கொண்டு வந்தாள், தேவபக்தியற்ற இந்தச் செய்தியாளர்கள் பாகாலின் "சுவிசேஷத்தை" பரப்பினர். யேசபேல் தனது கோவில்களையும் தனது புனிதத்தலங்களையும் கட்டுவித்தாள் மற்றும் அவளும் அவளது தோழிகளும் அந்த புனிதத்தலங்களில் பரிசுத்தமற்ற சடங்காச்சாரங்களில் பங்கேற்கத் தொடங்கினர்.

இந்தப் பெண் செய்தது என்ன என்பதை நான் வாசிக்கையில், *சத்தியத்திற்காக* நாம் இதே போன்ற வைராக்கியம் கொண்டிருந்தால் நாம் நிறைவேற்றக்கூடியவை என்னவாக இருக்கும் என்று வியப்படையாதிருக்க என்னால் முடியவில்லை. நாம் அவளது செயல்முறைகளைப் பயன்படுத்தக் கூடாது, ஆனால் நாம் நமது முழு இருதயங்களுடன் தேவனுடைய வழியே ஒரே வழியாக உள்ளது என்று விசுவாசித்து, அந்த உறுதிப்பாட்டை நமது முழு இருப்புடன் பலப்படுத்தினால், தேவனுடைய வசனம் எவ்வளவாகப் பரவிச் செழிக்கும்!

இருப்பினும் நாம், யேசேபேலின் நடவடிக்கைகள் யாவற்றையும் கண்ணோக்கி முடிக்கவில்லை. நமது வேதவசனப் பகுதிக்குத் திரும்பி, யேசபேல் ஆகாப்மீது எவ்வளவாகச் செல்வாக்குச் செலுத்தினாள் என்பதைக் காண்போமாக:

> *அவன் போய் பாகாலையும் சேவித்து அதைப் பணிந்துகொண்டு, தான் சமாரியாவிலே கட்டின பாகாலின் கோவிலில் பாகாலுக்குப் பலிபீடத்தை எடுப்பித்தான். ஆகாப் ஒரு விக்கிரகத்தோப்பையும் வைத்து, … (1 இராஜாக்கள் 16:31ஆ-33அ).*

ஆகாப் பலவீனமாக இருக்க அவனது மனைவி பலமானவளாக இருந்தாள் என்பதே ஆகாபைப் பற்றி உதிக்கும் சித்தரிப்பாக உள்ளது. திருமண உறவில் அவள் செல்வாக்குச் செலுத்தும் நபராக இருந்தாள். அவளே முடிவுகளை மேற்கொண்டாள். தொடர்ந்து வரும் அதிகாரங்களில் ஏற்படும் போராட்டமானது எலியாவுக்கும் ஆகாபுக்கும் இடையிலான போராட்டமாக இருக்கவில்லை, அது எலியாவுக்கும் யேசபேலுக்கும் இடையிலான போராட்டமாக இருக்கிறது. பொல்லாங்கையே உருவமாகக் கொண்ட யேசபேலுக்கும், நன்மையையே உருவமாகக் கொண்ட எலியாவுக்கும் இடையில் ஆகாப் மாட்டிக்கொண்டிருந்தார்.

சிலவேளைகளில் நாம், எதிர்க்கப்பட இயலாத சக்தி மற்றும் அசைக்க முடியாத பொருள் என்ற வகையில் போராடிக்கொண்டிருந்த, எலியாவுக்கும் யேசபேலுக்கும் இடையில் பிடிபட்டு இருந்த ஆகாபுக்காக ஏற்குறைய வருத்தமாக உணருகிறோம். அவர் [ஆகாப்] வேறு யாரையேனும் திருமணம் செய்துகொண்டிருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று நாம் வியப்படைகிறோம். அவரது பெயரானது, "தந்தை எனக்குச் சகோதரராக இருக்கிறார்" என்று அர்த்தப்படும் பெயரின் குறுக்கப்பட்ட வடிவமாக இருந்தது, இது "பரலோகத்தின் பிதா எனது சகோதரர்" என்று அர்த்தப்படுவதாக பொதுவாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. அவர் தமது பிள்ளைகளுக்கு, யெகோவாவைக் கனப்படுத்தும் வகையில் பெயரிட்டிருந்தார்: அகசியா ("யெகோவா பற்றிக்கொள்கிறார்"), யோராம் ("யெகோவா உயர்ந்தவராக இருக்கிறார்") மற்றும் அத்தாலியா ("யெகோவா பெலமுள்ளவராக இருக்கிறார்").

நாம் காணப்போகிறபடி, ஒரு இடத்தில் அவர் தம்மைத் தேவனுக்கு முன்பாகத் தாழ்த்தவும் செய்தார்.

திருமணம் நடந்தபோது அது ஒரு மாபெரும் அரசியல் அதிரடி என்று கருதப்பட்டது என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. தீரு தனது மகிமையின் உச்சத்தில் இருந்தது. இஸ்ரவேலின் இளவரசர், தீருவின் அழகிய மற்றும் அறிவார்ந்த இளவரசியை அவளது ஐசுவரியமிக்க சீர்வரிசையுடன் திருமணம் செய்துகொள்வதன் மூலம் பெனிக்கியாவுடன் ஒரு உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளுதல் என்பது, திறமை மிக்க முடிவு என்று கருதப்பட்டிருக்கும். இருப்பினும், இந்தத் திருமணமானது ஆகாபை அழித்தது மற்றும் ஒரு நாட்டை ஏறக்குறைய அழித்துப் போட்டது.

நாம் யாரைத் திருமணம் செய்துகொள்கிறோம் என்பது வேறுபாடு எதையாவது ஏற்படுத்துகிறதா? அதை ஒருக்காலும் சந்தேகப்படாதீர்கள். நாம் யாரைத் திருமணம் செய்துகொள்வது என்று மேற்கொள்ளும் முடிவைக் காட்டிலும் அதிகமாக வேறு எந்த முடிவும், இங்கு நமது சந்தோஷத்திலும் பரலோகத்திற்கான நமது நம்பிக்கையிலும் செயல்விளைவை ஏற்படுத்த முடியாது.

எனவே நாம் 33ம் வசனத்தின் பிற்பகுதியை இவ்வாறு வாசிப்பதில் வியப்படைவதில்லை: "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குக் கோபம் உண்டாக்கும்படிக்கு தனக்கு முன்னிருந்த இஸ்ரவேலின் ராஜாக்களெல்லாம் செய்ததைப்பார்க்கிலும் அதிகமாய்ச் செய்துவந்தான்."

இவ்வசனமானது இருதய வலியொன்றின் விளக்கமான ஒரு பெருமூச்சுடன் முடிவடைகிறது. உண்மையான ஒரே தேவன்மீதான, மினுக்கிட்டுக் கொண்டிருந்த விசுவாசத்தின் சுடரானது ஏறக்குறைய அணைந்து போயிருந்தது. இந்தச் சூழ்நிலையைப் பற்றி ஒரு பிரசங்கியார், பின்வருமாறு கூறுவதன்மூலம் அதைத் தொகுத்துரைத்தார்: "தேரையானது அரியணையில் அமர்ந்திருந்தது; அவனது பக்கமாக விரியன் சுருண்டிருந்தது." கிராமப்புறமானது பாகாலியத்தின் ஊழியக்காரர்களால் நிரம்பி வழிந்தது. இஸ்ரவேல் மக்களின் நிலைப் பற்றிய விஷயம் என்னவாக இருந்தது? அவர்கள் இரு கருத்துக்களுக்கு இடையில் நொண்டிக்கொண்டிருந்தனர். அரசியல் உபாயமானது, "ஒரு கலகத்தை தூண்டாதீர்கள்; அமைதியைக் காத்துக்கொள்வதே செய்வதற்குச் சாதுரியமான செயலாக உள்ளது" என்று கூறியது. உடன்பாடு செய்துகொள்ளுதல் என்பது சகித்துக்கொள்ளுதல் என்ற மேல்சுற்றிய தாளினுள் பரிசாக வந்தது.

ஏழாயிரம்பேர் பாகாலுக்கு முழங்காற்படியிடவோ அல்லது அவனது உருவத்தை முத்திசெய்யவோ இல்லை, ஆனால் அவர்களின் உதடுகளில் இருந்து கதறுதல் எதுவும் வரவில்லை. யெகோவா தேவனுடைய தீர்க்கதரிசிகளில் ஒரு நூறுபேர் இன்னமும் உயிருடன் இருந்தனர், ஆனால் அவர்கள் மறைவான குகை ஒன்றில் ஒளித்து வைக்கப்பட்டிருந்தனர், அவர்கள் தங்கள் பாதணிகளில் நடுக்கமும் திகிலும் கொண்டவர்களாக இருந்தனர்.

யெகோவாவுக்காக எழுந்து நிற்பவர் யார்?

இஸ்ரவேலில் தேவனுடைய மனிதர் எங்கிருந்தார்?

ஆகாப் மற்றும் யேசபேல் என்ற மரணத்தை விளைவிக்கும் ஜோடி மற்றும் அவர்களின் ஆசாரியர்களின் சேனை ஆகியோருக்கு எதிராக எழுந்து நிற்கக்

கூடியவர் யாரேனும் ஒருவராவது இருந்தாரா?

இன்றைய நாட்களில் அந்தக் கேள்விகளின் செயல்தாக்கத்தை நாம் உணர முடியுமா? ஒழுக்கவீனமும் தவறான மதமும் நம்மைச் சுற்றிலும் உள்ளன. கிறிஸ்தவர்கள் என்று உரிமைகோரிக் கொள்பவர்களில் பலர், நமது சுற்றுச்சூழல் களில் இருந்து வித்தியாசப்படுத்த இயலாத அளவுக்கு காட்சியில் நன்கு கலந்துள்ளனர். மதரீதியாக நடுநிலையாக இருத்தல் என்பது ஏராளமாகியுள்ளது. நம்மில் பலர், நமது சுறுசுறுப்பின்மையின் வறட்டுத்தனத்தினால் பண்புபடுத்தப் பட்டிருக்கிறோம்.

கர்த்தருக்காக எழுந்து நிற்பவர் யார்? யார்?

16ம் அதிகாரமானது, முற்றிலும் தொடர்பற்ற நிகழ்ச்சி ஒன்றைக் கூறும் ஒரு சிறிய விசித்தரமாக காணப்படும் வசனத்துடன் முடிகிறது:

> அவன் நாட்களில் பெத்தேல் ஊரானாகிய ஈயேல் எரிகோவைக் கட்டினான்; கர்த்தர் நூனின் குமாரனாகிய யோசுவாவைக்கொண்டு சொல்லியிருந்த வார்த்தையின்படியே, அவன் அதின் அஸ்திபாரத்தைப் போடுகிறபோது, அபிராம் என்னும் தன் மூத்த குமாரனையும், அதின் வாசல்களை வைக்கிறபோது செகூப் என்னும் தன் இளையகுமாரனையும் சாகக்கொடுத்தான் (வசனம் 34).

நாம் மறுபடியும் கண்ணோக்குகையில், நாம் "கர்த்தர் … சொல்லியிருந்த வார்த்தையின்படியே" என்ற வார்த்தைகளைக் கண்ணோக்குகிறோம். ஏவுதலினால் உரைக்கப்பட்ட எச்சரிக்கைக் குரல் ஒன்று உண்மையாயிற்று.[1] எழுத்தாளர் நமக்கு, தேவன் இன்னமும் ஜீவனுள்ளவராக, செயல்படுபவராக இருக்கிறார் என்பதை அறியச் செய்கிறார்.

இவ்வாறாக நாம், 17ம் அதிகாரத்தின் முதல் வசனத்திற்கு வருகிறோம்:

> கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா ஆகாபை நோக்கி: "என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" என்றான்.

"எலியா … என்றான்" என்பது திறவுகோல் வார்த்தைகளாக உள்ளன.

## இஸ்ரவேலில் தேவனுடைய மனிதர்

தேவன் இஸ்ரவேலில் தமது மனிதரைக் கொண்டிருந்தார் மற்றும் எலியா என்பதே அம்மனிதரின் பெயராக இருந்தது.

இந்த எலியா என்பவர் யார்? எடுத்துரைப்பின் இந்த இடத்திற்கு முன்னால் நாம் இவரைப் பற்றி வாசிப்பதில்லை, ஆனால் அவர் திடீரென்று காட்சியில் வந்து, அரசர், அரசி, நாட்டின் மதம், பாகாலின் தீர்க்கரிசிகள் மற்றும் நாடு முழுமைக்கும் அறைகூவல் விடுக்கிறார்!

நாம் எலியாவைப் பற்றிக் கொஞ்சமே அறிகிறோம். அவரது குடும்பத்தைப் பற்றியோ அல்லது அவரது சிறுவயதின் விபரம் பற்றியோ அல்லது அவர் தேவனிடத்தில் இருந்து தமக்குக் கட்டளையை எவ்வாறு பெற்றுக்கொண்டார்

என்பது பற்றியோ, நாம் ஒன்றும் அறிவதில்லை. இருப்பினும் நாம் அறிகிற சிறிதளவு விபரமானது மிகவும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

எலியா “கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாக” இருந்தார். “திஸ்பியன்” என்பது, அவர் கீலேயாத்தில் ஏதோ ஒரு இடத்தில் இருந்த திஸ்பி என்ற மறைவான கிராமத்தில் இருந்து வந்தவர் என்று அர்த்தப்படும். கீலேயாத் என்பது, யோர்தான் நதியின் கிழக்குப் பகுதியில் இருந்த வனாந்திரப் பகுதியும் கரடுமுரடான கிராமப்பகுதியுமாக இருந்தது. (எலியாவின் நாட்களில் என்ற வரைபடத்தில் காணவும்.) இது கைவிடப்பட்ட மற்றும் தனிமையான பிரதேசமாக இருந்தது. அங்கு மதில்சுவர்கள் சூழ்ந்த நகரங்கள் எதுவும் இல்லை; அங்கிருந்த குடிகளில் பெரும்பான்மையானவர்கள் கூடாரங்களில் வாழ்ந்துகொண்டு ஆடுகள் அல்லது காட்டு மிருகங்களை மேய்த்துக்கொண்டிருந்தனர். பாதியளவே நாகரிகம் பெற்றிருந்த அப்பகுதியில் வாழ்ந்தவர்கள் நயப்பாங்கோ அல்லது அறிவுத்திறனோ இல்லாதவர்களாக இருந்தனர்.

தேவன், ஆகாபையும் யேசபேலையும் கவரும் விதமாக இருக்கக்கூடிய, இரத்தாம்பரம் தரித்து மென்மையாகப் பேசும் இளவரசர் ஒருவரைத் தேர்ந்துகொள்ளவில்லை என்பது ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது. மாறாக அவர், பாலைவனம் என்ற பல்கலைக் கழகத்தில் பயின்றிருந்த, தனிமையில் முதுகலைப் பட்டம் பெற்றிருந்த ஒருவரையே தேர்ந்துகொண்டார்.

எலியா “அவன் மயிர் உடையைத் தரித்து, வார்க்கச்சையைத் [அல்லது அகன்ற இடைக் கச்சையை] தன் அரையிலே கட்டிக்கொண்டிருந்தான்” என்று விவரிக்கப் படுகிறார் (2 இராஜாக்கள் 1:8). அவர் முடியினால் செய்யப்பட்ட ஒரு முரட்டு உடையை உடுத்தியிருந்தார் (சகரியா 13:4). எலியாவின்ஆவியை உடையவராக யோவான் ஸ்நானன் வந்தபோது, அவர் ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக்கொண்டிருந்தார்; வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும் அவருக்கு ஆகாரமாயிருந்தது (மத்தேயு 3:4).

நாம் எலியாவைப் பற்றி நினைக்கும்போது, அவர் முரட்டு உடையில் இருந்த - நயப்பாங்கற்ற தோற்றம்கொண்ட உருவமாக இருந்தார் என்ற வகையில் அவரைப்பற்றி நாம் நினைக்க வேண்டும்: பறட்டையான முடி; பம்பையான தாடி; பழைய தோலின் நிறத்திற்கு மாற்றம் பெற்றிருந்த தோல்; கீலேயாத்தின் கடுமையான வாழ்வினுடைய குளிர் விரைப்பினால் கடினப்படுத்தப்பட்டிருந்த, ஆஜானு பாகுவான மற்றும் கட்டுமஸ்தான உடல், ஒரு குதிரையைவிட விரைவாக ஓடக்கூடியவராகிய ஒரு உடல். அவரது கண்களில், ஜீவனுள்ள தேவன்மீதான அவரது வைராக்கியம் பளிச்சிட்டது; அவரது தோள்களில் இருந்து அவரது தளர்வான மேலங்கி தொங்கிற்று - அந்த முரடான ஆடையானது கம்பளி அல்லது தோலினால் செய்யப்பட்டிருக்க வேண்டும் - அது அவரது அலுவலின் அடையாள அட்டையாகவும் அவர் தமது அற்புதங்களில் பலவற்றைக் கொண்டுவரக் கருவியாகவும் பயன்பட்டது.

தேவனுடைய வழிகள் நமது வழிகளாக இருப்பதில்லை. மனிதர் காண்கிற விதமாகத் தேவன் காண்கிறதில்லை. நாம் அடிக்கடி, “நான் தகுதியானவனல்ல. கர்த்தருக்கென்று இதை அல்லது அதைச் செய்ய நான் ஆயத்தமாக இல்லை. அந்த நேர்த்தி எனக்கில்லை. நான் கல்வி கற்றிருக்கவில்லை” என்று கூறுகிறோம். இருப்பினும் தேவன்மீது நிலைத்திருக்கும் இருதயத்தையே அவர் தேடுகிறார்,

அது வைராக்கியத்தால் பற்றியெறியும் இருதயமாக - எலியாவின் இருதயம் போன்றதாக - இருக்க வேண்டும்.

இப்போது, நயப்பாங்கற்றதாகக் காணப்படும் இந்த ஜீவி அரசருக்கு முன்பாக நின்று கொண்டு பின்வரும் அறைகூவலை விடுப்பதைச் சித்தரித்துப் பாருங்கள்: "என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (1 இராஜாக்கள் 17:1ஆ).

எலியா விடுத்த அறைகூவலில் உள்ள மூன்று விஷயங்களைப் பற்றிக் கவனியுங்கள்:

(1) அது அரசரிடத்தில் விடப்பட்ட அறைகூவலாக இருந்தது. இந்தத் தேவபக்தியற்ற மதத்தை அழிப்பதற்கு எலியா, முதல் நகர்வாக உச்சப்பதவியினிடத்திற்கே நேரடியாகச் சென்றார்.

(2) அது பாகாலுக்கு எதிரான அறைகூவலாக இருந்தது. பாகால் என்பவன் இயற்கைக்கான அவர்களின் கடவுளாக இருந்தான். பாகால் பனியையும் மழையையும் கட்டுப்பாடு செய்ததாக அவர்கள் நினைத்தனர். செயல் விளைவில் எலியா, "மழையின் மூலமாகப் பதில் அளிக்கும் தேவனே தேவனாக இருக்கட்டும்!" என்று கூறினார்.

(3) அது தனியாக நின்ற ஒரு மனிதரால் விடப்பட்ட அறைகூவலாக இருந்தது. எலியாவைப் பற்றிய நமது படிப்பில், அடிக்கடி நாம், அவர் நண்பர்கள் அல்லது துணையாளர்கள் எவருமின்றி, உடன் ஊழியர்கள் எவருமின்றி அல்லது தமக்குப் பலம்கொடுக்க ஆதரவுக்குழு எதுவுமின்றி - தனிமையில் நிற்பதை, மாபெரும் எதிர்ப்புகளுக்கு எதிராகத் தனிமையில் இருப்பதை, சாவுக்கேதுவான அபாயத்திற்கு எதிராகத் தனிமையில் நிற்பதைக் காண்போம்.

நம்மில் பலர் இந்த அம்சத்தில் எலியாவுடன் நம்மை அடையாளப்படுத்த முடியும். அவ்வப்போது நாம் வேலைசெய்யும் இடத்தில், நாம் பள்ளிக்குச் செல்லும் இடத்தில், நமது அயலகத்தில், ஒருவேளை நமது இல்லத்திலும்கூட, நாம் ஆராதிக்கும் சபையிலும்கூட தனிமையில் நிற்க வேண்டி இருந்திருக்கலாம். அது கடினமானதாக உள்ளது அல்லவா?

இப்படிப்பட்ட எதிர்ப்புகளுக்கு எதிராக எலியாவைத் தனிமையில் நிற்க வலிமையுள்ளவர் ஆக்கியது எது? அவர் தனிமையில் இருக்கவில்லை என்பதே அதற்குப் பதிலாக உள்ளது. நமது வேதவசனப்பகுதி, "... என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்" என்று நமக்குக் கூறுகிறது. எலியா *தன்மீது* நம்பிக்கை உடையவராக இருக்கவில்லை, ஆனால் அவர் *யெகோவாவின்மீது* நம்பிக்கை உடையவராக இருந்தார். அவர் எலியாவின்மீதல்ல, ஆனால் இந்த அண்டத்தைப் படைத்தவர்மீது சார்ந்திருந்தார்.

இந்த மனிதரைப்பற்றிச் சிறிதளவே அறிந்துள்ளோம் என்று நாம் கூறியிருக்கிறோம், ஆனால் பின்வரும் ஒரு விஷயத்தை நாம் உய்த்துணர முடியும்: அவர், கர்த்தரை நேசித்துத் தேவனுடைய வழிகளில் தம்மை வளர்த்திருந்த பெற்றோர்களைக் கொண்டிருந்தார். அதை நான் ஏன் கூறுகிறேன்? அவர்கள் அவருக்குக் கொடுத்த பெயரின் நிமித்தமாக. "எலியா" என்பது ஒரு கூட்டு வார்த்தையாக உள்ளது. "ஏல்" என்பது "தேவன்" என்பதற்கான எபிரெய

வார்த்தையாக உள்ளது. "யா" என்பது "யெகோவா" என்பதன் குறுக்கப்பட்ட வடிவமாக உள்ளது. எபிரெய மொழியில் "வீ" என்பது "எனது" அல்லது "என்னுடைய" என்ற உரிமைத்துவப் பெயர்ச்சொல்லாக உள்ளது. அவரது பெயர் "யெகோவா எனது தேவனாக இருக்கிறார்" என்ற நேரடி அர்த்தமுடையதாகும். வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், "பாகாலோ அல்லது ஆகாப்போ அல்ல, ஆனால் யெகோவாவே எனது தேவனாக இருக்கிறார்" என்பதாகும்.

அவரது பெயர் யெகோவாவைச் சார்ந்திருத்தலைச் சுட்டிக்காண்பிக்கிறது. இந்த வேளையில் அவர் கூறியது, கர்த்தர் மீது அவரது நம்பிக்கை இருந்தது என்பதையும் நமக்குக் கூறுகிறது: "... இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான்." இந்த வார்த்தைகளில் ஆழ்ந்த அர்த்தம் பொதியப்பட்டுள்ளது.

எலியா, "உங்கள் புறதெய்வக் கடவுள்களுக்கு நேர்மாறாக, யெகோவா மரித்தவராக அல்ல, ஆனால் ஜீவனுள்ளவராக இருக்கிறார்" என்று கூறினார்.

எலியா, "நான் ஜீவனுள்ள தேவனுக்கு முன்பாக நிற்கிறேன். ஆகாபே, நான் உனது முன்னிலையில் நின்றாலும், *அவரது* பிரசன்னத்தை நான் அறிந்திருக்கிறேன்" என்று கூறினார்.

எலியா, "நான் அவருக்கு முன்பாக அவருடைய ஊழியக்காரன் என்ற வகையில், உன்னுடைய ஆணைகளின்படி அல்ல, ஆனால் அவருடைய ஆணைகளின்படி செய்யவே நிற்கிறேன். நான் உனக்கு முன்பாக *அவருடைய* பிரதிநிதியாக நிற்கிறேன்" என்று கூறினார்.

எலியா, "நான் தேவனுக்குப் பயப்படுகிறேன்; நான் உனக்குப் பயப்படுவதில்லை" என்று கூறினார்.

ஆம், தேவன் தமது மனிதரை இஸ்ரவேலில் கொண்டிருந்தார்.

## முடிவுரை

இப்போது நாம் இந்தப் பாடத்தை நமக்குத் தனிப்பட்ட வகையில் நடைமுறைப்படுத்துவோம்.

இந்த விசேஷித்த காலங்களுக்குத் தேவன் இன்னும் தமது விசேஷித்த மனிதர்கள், பெண்கள், சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் தேவைப்படுபவராக இருக்கிறார். அவர் இன்னமும், கடினமான நாட்களில், தனிமையாக நிற்கவேண்டியிருப்பினும் தமக்காக நிற்கக்கூடியவர்களைத் தேடிக்கொண்டு இருக்கிறார். தந்தையர்கள், தாய்மார்கள், கணவர்கள், மனைவியர்கள், மகன்கள், மகள்கள், வேலைகொடுப்பவர்கள், வேலையாட்கள், ஓய்வுபெற்றவர்கள், மாணவர்கள், சிறு பிள்ளைகள், இளம் வயதுடையவர்கள், வயது வந்தவர்கள், இளைஞர்கள், முதியவர்கள், நடுத்தர வயதுடையவர்கள்: உங்களைத் தேவன் தமது விசேஷித்த மக்களில் ஒருவராக இருக்கும்படி விரும்புகிறார். தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வாழ்வானது எதை நிறைவேற்ற முடியும் என்பதை, எலியாவின் வாழ்வு நமக்குக் காண்பிக்கிறது.

மேலும், எவ்வித முன்னுரிமையும் இன்றி முற்றிலும் அவருக்கு அர்ப்பணிக்கிறவர்களையே, இடர்ப்பாடு இருப்பினும் அவரது சித்தத்தைச் செய்ய எப்போதும் தயாராக இருப்பவர்களையே தேவன் பயன்படுத்துகிறார் என்பதையும் எலியாவின் வாழ்வு காண்பிக்கிறது. நீங்கள் அப்படிப்பட்ட ஒருவராக இருக்க மனவிருப்பம் கொண்டுள்ளீர்களா?

குறிப்பு

[1]இந்த சாபம் யோசுவா 6:26ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

## காட்சி - உதவிக் குறிப்புகள்

இந்தப் பாடத்தொடரில் பல பாடங்களுக்கு எளிய காட்சி உதவிகள் கருத்தாகத் தெரிவிக்கப்படும். முதல் பாடத்தில், எலியாவின் நாட்களில் என்ற வரைபடம் அறிமுகப்படுத்தப்பட்டு, பின்பு இந்தப் பாடத்தொடர் முழுவதிலும் உள்ள பாடங்களில் குறிப்பிடப்படும் நகரங்கள் மற்றும் நில அடையாளக்குறிகள் ஆகியவற்றைக் கண்டறியப் பயன்படுத்தப்பட முடியும்.

## பாட வரைகுறிப்பு

அறிமுகம்

A. பழைய ஏற்பாட்டில் வழக்கத்தில் இருந்து மிகவும் மாறுபடும் மனிதர்களில் ஒருவரைப் பற்றிய படிப்பு ஒன்றை நாம் தொடங்குகிறோம்.
   1. புதிய ஏற்பாட்டில் இவர் முப்பதுக்கும் அதிகமான முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளார்.
   2. இயேசு மறுரூபமானபோது அவருடன் தரிசனமானவர்களில் எலியாவும் ஒருவராக இருந்தார்.

B. அவர் ஒரு பூரணப்பட்ட நபராக இருந்தார் என்றோ அல்லது மிக மேலான மனிதப்பிறவியாக இருந்தார் என்றோ நாம் நினைக்கக் கூடாது, ஆனால் அவர் ஒரு விசேஷித்த காலத்திற்காக, தேவனு டைய விசேஷித்த மனிதராக இருந்தார்.

I. எலியாவின் நாட்களில் இஸ்ரவேல்

A. எலியாவை நாம் முற்றிலுமாக மதித்து உணருவதற்கு, அவரது காலங்களில் சந்தர்ப்பப்பொருளில் அவரை நாம் கண்ணோக்க வேண்டும்.
   1. நாம் 1 இராஜாக்கள் 16:29 உடன் தொடங்குவோமாக:
      a. இஸ்ரவேல் நாடு இரண்டு இராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. எலியா வடக்கு இராஜ்யத்தில் ஊழியம் செய்தார்.
      b. ஆகாப் இஸ்ரவேல்மீது இருபத்தி இரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்தார்.
   2. ஆகாப் தமது வாழ்வில் பல விஷயங்களை நிறைவேற்றியிருந்தார், ஆனால் அவற்றைப்பற்றிச் சில விஷயங்களையே ஏவுதல் பெற்ற எழுத்தாளர் நமக்குக் கூறுகிறார். 1 இராஜாக்கள் 16:30, ஆகாபின் ஆட்சி பற்றிய தேவனுடைய கண்ணோக்கக் கருத்தை நமக்குத் தருகிறது: "... தனக்கு முன்னிருந்த எல்லாரைப்பார்க்கிலும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்."

    a. யெரொபெயாமைக் காட்டிலும் மிகமோசமானவராக இருந்தார் (1 இராஜாக்கள் 12:28, 29, 31, 33).
    b. நாதாப்பைக் காட்டிலும் மிகமோசமானவராக இருந்தார் (1 இராஜாக்கள் 15:26, 27).
    c. பாஷாவைக் காட்டிலும் மிகமோசமானவராக இருந்தார் (1 இராஜாக்கள் 15:29, 33, 34).
    d. ஏலாவைக் காட்டிலும் மிகமோசமானவராக இருந்தார் (1 இராஜாக்கள் 16:8-10).
    e. சிம்ரியைக் காட்டிலும் மிகமோசமானவராக இருந்தார் (1 இராஜாக்கள் 16:11, 15).
    f. ஓம்ரியைக் காட்டிலும் மிகமோசமானவராக இருந்தார் (1 இராஜாக்கள் 16:23-26).
  3. ஆகாப் யேசபேலைத் திருமணம் செய்துகொண்டார் (1 இராஜாக்கள் 16:31). இஸ்ரவேல் அரசர்களின் தொடர்பாக, ஒரு திருமணம் குறிப்பிடப்படுதல் இதுவே முதல் முறையாகும். இது ஏன் குறிப்பிடப்பட்டுள்ளது?
    a. யேசபேல் யாராக இருந்தாள் என்பதனிமித்தம் (வெளிப்படுத்தின விசேஷம் 2:20ஐக் கவனிக்கவும்). அவள் "சீதோனியரின் ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தி"யாக இருந்தாள். அவள் புறதெய்வ வணக்கக்காரியாக இருந்தாள் (உபாகமம் 7:1-5). அவளது தந்தை பாகலின் ஆசாரியராக இருந்திருந்தார்.
    b. யேசபேல் செய்தவற்றினிமித்தம். அவள் இஸ்ரவேல் சமுகத்தில் ஊழிய வைராக்கியத்துடன் பாகாலுக்கு ஆராதனையை அறிமுகப்படுத்தினாள்.
    c. யேசபேல் தனது கணவர் மீது செல்வாக்குச் செலுத்தியதனிமித்தம்: 1 இராஜாக்கள் 16:31-33. அவள் பலமுள்ளவளாகவும் ஆகாப் பலவீனமானவராகவும் இருந்தனர். (நீங்கள் யாரைத் திருமணம் செய்துகொள்கிறீர்கள் என்பது ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துகிறது!)
  4. "ஆகாப் ... இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குக் கோபம் உண்டாக்கும்படிக்கு தனக்கு முன்னிருந்த இஸ்ரவேலின் ராஜாக்களெல்லாம் செய்ததைப்பார்க்கிலும் அதிகமாய்ச் செய்துவந்தான்" (1 இராஜாக்கள் 16:33).

B. நாம் காலங்களைக் காணுகையில், யெகோவாவுக்காக எவரொருவரும் எழுந்துநிற்க முடிந்ததா இல்லையா என்று நாம் வியப்படைகிறோம். தேவன் இஸ்ரவேலில் தமது மனிதரைக் கொண்டிருந்தாரா?
  1. 1 இராஜாக்கள் 16ம் அதிகாரம் ஒரு விசித்திரமான சிறிய வசனத்துடன் முடிவடைகிறது: 34ம் வசனம். தேவன் இன்னமும் ஜீவிக்கிறார்; தேவன் இன்னமும் செயல்படுகிறார்!

2. 1 இராஜாக்கள் 17:1ஐக் கவனியுங்கள். தேவன் இஸ்ரவேலில் தமது மனிதரைக் கொண்டிருந்தார், மற்றும் எலியா என்பது அந்த மனிதரின் பெயராக இருந்தது.

II. இஸ்ரவேலில் தேவனுடைய மனிதர்

A. எலியா யாராக இருந்தார்?

1. அவர் "கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாக" இருந்தார்.

a. "திஸ்பியன்" என்பது திஸ்பி என்ற மறைமுகமான ஒரு கிராமத்தில் இருந்து வந்தவர் என்று அர்த்தப்படுகிறது.

b. "கீலேயாத்" என்பது யோர்தான் நதியின் கிழக்குப்பகுதி யில் இருந்த வனாந்தரமான, கரடுமுரடான கிராமப்பகுதி யாகும்.

2. எலியா, "மயிர் உடையைத் தரித்து, வார்க்கச்சையைத் தன் அரையிலே கட்டிக்கொண்டிருந்த" மனிதராக இருந்தார் (2 இராஜாக்கள் 1:8; காண்க சகரியா 13:4; மத்தேயு 3:4).

B. இந்த நயப்பாங்கற்ற ஜீவி அரசரின் முன்பாக நின்றுகொண்டு பின்வரும் அறைகூவல் விடுத்ததைக் கண்ணோக்குங்கள்: 1 இராஜாக்கள் 17:1.

1. இந்த அறைகூவல் பற்றிய மூன்று விஷயங்களைக் கண்ணோக்குங்கள்:

a. இது அரசருக்கு விடுக்கப்பட்ட அறைகூவலாக இருந்தது.

b. இது பாகாலுக்கு எதிராக விடுக்கப்பட்ட அறைகூவலாக இருந்தது.

c. இது தனியாக நிற்கும் ஒரு மனிதரால் விடுக்கப்பட்ட அறைகூவலாக இருந்தது.

2. இப்படிப்பட்ட எதிர்ப்புகளுக்கு எதிரே தனியாக நிற்க எலியாவை வல்லமையுள்ளவர் ஆக்கியது எது? எலியா கர்த்தர் மீது நம்பிக்கையாயிருந்தார்.

a. அவரது பெற்றோர், உண்மையான தேவன்மீது விசுவாசம் கொண்டிருந்தனர் என்பதை அவரது பெயர் சுட்டிக்காண்பிக்கும்.

b. அவர் கர்த்தர்மீது நம்பிக்கையாயிருந்தார் என்பதை அவரது வார்த்தைகள் சுட்டிக் காண்பிக்கும்.

c. இவர் இஸ்ரவேலில் தேவனுடைய மனிதராக இருந்தார்.

முடிவுரை

A. தேவன் இன்னமும் விசேஷித்த காலங்களுக்குத் தமது விசேஷித்த மக்கள் தேவைப்படுபவராக இருக்கிறார், ஆனால் அவருக்கு முழுமையாக அர்ப்பணித்துள்ளவர்களை மாத்திரமே அவர் பயன்படுத்த முடியும்!

B. நீங்கள் தேவனுடைய மனிதராக அல்லது மனுஷியாக வாழ மனவிருப்ப மாயிருக்கிறீர்களா?